SRI R. SRINIVASA IYER : Was not the proposal to construct a road bridge-*cum*-regulator at a common place given up and the suggestion to construct a bridge and a regulator separately accepted by the Hon. Minister for Home when he visited the place on 26th December 1958? What became of that proposal?

THE HON. SRI P. KAKKAN : The hon. Member is correct.

Radio sets

* 955 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் எத்தனை கிராமப் பஞ்சாயத்து போர்டுகளிலே (1) ரேடியோ செட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன ? (2) வைக்கப்படாமலிருக்கின்றன ?

(ஆ) பஞ்சாயத்து போர்டுகளிலே வைக்கப்பட்டிருக்கும் ரேடியோ செட்டுகளை அரசாங்க அதிகாரிகள் தணிக்கை செய்வதற்குப் பதிலாக ரேடியோ செட்டுகளை விற்பனை செய்யும் கம்பெனிகள் மூலமாக கவனித்துக் கொள்ள அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருப்பின், எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) (i) 98.

(ii) About 7,240 panchayats.

(*b*) Yes, Sir. Representations have been received by the Chief Engineer from some panchayats.

(*c*) Orders have been issued giving the option to local bodies having an annual income below Rs. 2,000 to entrust the servicing of their sets to private agencies provided such servicing is cheaper than that done through the State Broadcasting Department.

Harijan Welfare Schools

* 956 *Q.*—SRI C. MUTHIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாகா பள்ளிகளை ஸ்தல ஸ்தாபன பள்ளிகளுடன் சேர்க்க உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படி உண்டு என்றால், அதன் நன்மைகள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN (*a*) & (*b*) The question is under examination by the Government.

SRI C. MUTHIAH : சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே குழந்தைகளுடைய உள்ளத்தில் சமூக வேற்றுமை என்பது உண்டாகாமல் ஒழிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரையிலும் அதைச் செயலாற்றாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : எண்ணித் துணிக கருமம் என்பதற்கு ஏற்ப எதையும் யோசித்துத்தான் செய்யவேண்டி இருக்கிறது.

MR. SPEAKER : We are going discuss the Harijan Demand to-day. Hon. Members may say what they want to say during the discussion on the Demand.